# தூதன்

தூதன்-25 டிசம்பர் 2016 தூது-11




## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| ஆராதனை பாடல்கள் | 14 |
| இயேசு பிறப்பு | 15 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 16 |
| மாலி | 18 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 20 |
| திருச்சபை ஜெபநாள் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Young Readers Column | 28 |
| Health Tips | 30 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 35 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

## இறைவருகை (ADVENT)

(ஒரு விவிலிய வரலாற்றுப்பார்வை - A short Biblical Historical Survey)

'ADVENT' என்கிற ஆங்கில வார்த்தையின் பொருள் 'Arrival' (வருகை) என்பதாகும். இது லத்தீன் மொழிச்சொல்லான அட்வெந்துஸ் (Adventus) என்பதிலிருந்து ஆங்கில மொழிக்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

இறைவருகை (அ) கிறிஸ்து பிறப்புக்கு (Incornation) முந்தைய தூய அந்திரேயா திருநாளை ஒட்டி வருகின்ற நான்கு வாரங்களை அட்வெந்து காலம் (Advent Season) என்று அழைக்கிறோம். அட்வெந்துஸ், எப்பிபானியா, நாடாலே போன்ற சொற்கள் அனைத்தும் கடவுள் மனுவுருவெடுத்து வந்த வருகையையும், அதையொட்டிய விருந்தினைக் கொண்டாடுதலையும் குறிக்கின்றன.

தொடக்க காலத்தில் (முதல் நூற்றாண்டு) அட்வெந்து என்பது விருந்தைக் குறிக்க எழுந்த சொல்லாக இருந்தபோதிலும், நாளடைவில் இறைவருகை விழாவுக்கு (Christmas) முந்திய நாட்களைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்படலாயிற்று. முதல் நூற்றாண்டு பழைய இலத்தீன் குறிப்பு ஒன்றில் "பாருங்கள், ஆண்டவர் வந்துவிட்டார்" (Ecco Advent Dominatir Dominious) என்ற குறிப்புகளோடு இந்தக் காலம் துவங்குவதைக் காணமுடிகிறது. முதன்முதலில் இக்காலம் திருமுழுக்கு விருந்துக்குமுன் (விருத்த சேதனத்திருநாள்) வருகிற மூன்று வாரங்கள் மட்டுமே அனுசரிக்கப்பட்டது. பிறகு நாற்பது நாட்களாக (40 days of Advent) திருத்தி அமைக்கப்பட்டது. தபசுகாலம் எப்படி 40 ஆயத்த நாட்களோ, அப்படியே அட்வெந்து/வருகையின் காலமும் 40 நாற்களாகக் குறிக்கப் பட்டு இரண்டாம் வருகையின் ஆயத்த நாட்களாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஏறக்குறைய கி.பி. 5-ம் நூற்றாண்டின் கடைசிகாலத்தில் அட்வெந்து காலங்கள் மூன்று வார ஆயத்த காலங்களாகவும், அதைத் தொடர்ந்து இயேசுவின் விருத்தசேதனத் திருநாள் (Presentation of Christ) மற்றும் பிரசன்னத் திருநாள் (கிறிஸ்து மகிமைப்பட்ட திருநாள் அல்லது எபி:.பெனி) போன்றவைகளும் அடுத்தடுத்த வாரங்களில் கொண்டாடப்பட்டன.

### ஏன் முதல் வருகை (Why Christmas or the First Advent):

இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் படைப்பிற்குமிடையே புனித உறவு, பெற்றோர் பிள்ளை உறவு உண்டு என்பதைத் திருமறை தெளிவாக எடுத்தியம்புகிறது. தம் மூச்சுக்காற்றினாலே உருவாக்கப்பட்ட மனிதன் வீழ்ச்சியடைந்து, தம்முடன் இணைந்து வாழ்ந்த ஏதேன் வாழ்வை

இழந்துபோன சூழலிலும், இறைவன் இரங்கியும், இறங்கியும் வந்து மறுவாழ்வு தருகிறார். அதே கனிவின், அன்பின் உடன்படிக்கையிலே, சகோதரனைக் கொலை செய்து, மனவருத்தம் அடைந்த காயீனின் வழித்தோன்றல்களையும் வாழச்செய்கிறார். உலகமே தமக்கு விரோதமாய் நம்பிக்கையற்று, சுயநல மேட்டிமைக்குப் பின் சென்றபோதும், நோவா என்ற இறைபயம் உடைய அக்குடும்பத்தை மட்டும், படைப்புக்களுடன் காப்பாற்றுகிறார். நாடோடிகளான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்ற ஆதித்தந்தையர்களின் குடும்பங்களுடன் இறங்கிவந்து உறவுகொண்டு, ஆசி வழங்கி வழிநடத்தினார். யாக்கோபு என்னும் இஸ்ராயேலின் தலைமுறைகள் எகிப்து நாட்டில் அடிமைகளாகிப்போய், கூக்குரலிட்ட வேளையில் இரங்கிச் செவிகொடுத்து (யாத்.3:3-7) மோசே போன்ற தலைவர்களின் வழியே காப்பாற்றி, பாலை நில பயணத்திலே தண்ணீரையும், உணவையும் இறங்கியும், இரங்கியும் வழங்கி, பகலிலே மேகமாகவும் (Shadow from heat), இரவில் அக்கினியாகவும் (Warmth in cold) இறங்கிக் காப்பாற்றுவதைக் காணமுடிகிறது. நாதியற்ற மக்கள் வாழ்வில் நாட்டையும், வீட்டையும், வளங்களையும் வழங்கியபோதும், நாதனை மறந்து செழிப்பின் சுகத்தில் சுயநல படைப்புகளை வழிபட்டபோது தண்டித்து மீண்டும் சிறையிருப்புக்கு அனுமதித்தாலும், அதே மக்கள் மனம் மாறியபோது, இறங்கியும், இரங்கியும் விடுவிக்கிறவராய் ஆண்டவர் காணப்படுகிறார். இச்சிறையிருப்பின் (Exilic) மற்றும் சிறையிருப்பின் பிந்தைய காலங்களில் (Post Exilic) மக்கள் மேசியாவை (liberator) இறைவருகையின் அடையாளமாய் எதிர்நோக்கினர் (சங்.96:13). அவர் வந்து நமக்கு நீதி செய்து, தேசத்தை மீண்டும் அந்நிய நாட்டு ஆட்சியின் பிடியிலிருந்தும், கொடுங்கோலாட்சியாளரிடமிருந்தும் காப்பாற்றுவார் எனவும் நம்பினர். அவர் பேரரசராய், போர்வீரராய், பகையை வென்று, கொன்று, அரியணையில் அமருவார் என்று செலோத்தேய சமய அடிப்படைவாதிகள் (Fundamentalistic Zealots) நம்பினர்.

ஆனால், காலம் நிறைவேறினபோது ஆண்டவர் இயேசுவே, இறைமகனாய்த் தோன்றி, கிறிஸ்துவாய் (மேசியா) வெளிப்பட்டு, ஆதிக்க மக்கள் எதிப்பார்த்தபடியல்ல, அனைத்து மற்றும் அடித்தட்டு மக்களும், முழுபடைப்பும் விடுதலை பெற மானுடவதாரமாய் வந்து சிலுவை வழியே மீட்பை உண்டுபண்ணினார்.

அவர் காலத்தில் இந்த இறைவருகையை உணராத மக்கள், பின்னர் காலங்கள் செல்லச்செல்ல உணர்வடைந்தனர். அந்த முதல் வருகையே மேசியாவின் வருகை என்று உறுதியுடன் நம்பினர். அதனடிப்படையிலே இந்த உண்மையைப் புரிந்து நம்பிய ரோம அரசு (ஒரு காலகட்டத்தில் இந்த உண்மையை மறுத்து நசுக்கிய அரசு) முதல் திருச்சபையை நிறுவி, உலகத்திருச்சபையாய் அதை மாற்றியது. வந்த ஆண்டவர் மறுபடியும் வரப்போவதாகவும் தாமே முன்னறிவிக்கிறார் (யோவான் 14:3), விண்தூதர்களும் அதை முன்னறிவிக்கிறார்கள் (அப். 1:11)

## ஏன் இரண்டாம் வருகை? (Why second coming?) :

ரோமத் திருச்சபையில் (Roman Church) இந்த அட்வெந்து காலங்கள் மகிழ்ச்சியான கொண்டாட்ட காலங்களாய் மட்டுமல்ல, இரண்டாம் வருகையின் ஆயத்த காலங்களாகவும் நம்பப்பட்டு, பின்பற்றப்பட்டு, கொண்டாடப்பட்டு வந்தன. அதே பாரம்பரியத்திலே சீர்திருத்தச் சபைகளிலும் (Protestant and reformed churches) இந்த இரண்டு வருகைகளையும் நினைவுகூர்ந்து, ஆயத்தப்படுகிற காலங்களாக அனுசரிக்கப்படுகின்றன. ஆகவேதான் அப்போஸ்தலர், நிசேயா, அதனாசியு விசுவாசப் பிரமாணங்களிலும் இரண்டு வருகைகளையும் நம்பும் மணவாட்டியாய் திருச்சபை விளங்கி, விசுவாச அறிக்கை செய்வதையும், ஆயத்தப்படுவதையும் காண்கிறோம். வருகையின் காலப் பாடல்களிலும் நாம் இதைக் காணலாம் (சாலேமின் ராசா சங்கையின் ராசா, வரவேணும் எனதரசே, வருவார் விழித்திருங்கள்....).

முதல் வருகை மீட்பின் அடையாளமாகவும், இரண்டாம் வருகை நீதித்தீர்ப்பின் (Judgement) ஆயத்தமாகவும் கருதப்படுகிறது. இதை ஆண்டவரே முன்மொழிகிறார். "மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வரும்போது செம்மறியாடுகள், வெள்ளாடுகள் எனப் பிரித்து தகுந்த செயல்களுக்கு நியாயம் தீர்ப்பார்" (மத்தேயு 24,25, மாற்கு 13). பவுலடிகளாரும் இயேசுநாதர் இப்படி வரும்போது, மரித்தவர்கள் உயிரோடு இருக்கிறவர்கள் இணைந்து நியாயம் தீர்க்கப்படுவர் (1தெச.4:16) என்று உறுதியாய்ச் சுட்டுகிறார். ஆண்டவரின் வருகை உடனடியாக இருக்கும் என்று எண்ணிய காலத்தில், அது தாமதப்பட்ட போது, அக்கருத்து மாறி தாமதித்து நடைபெற்றாலும், அந்த வேளை தந்தையாகிய கர்த்தருக்கு மட்டுமே தெரியும் என்கிற அசைக்க முடியாத விசுவாசமும், அதற்கான ஆயத்தமும், விழிப்பும் எப்போதும் தேவை என பேதுரு போன்ற அடியவர்களால், அப்போஸ்தலர்களால் உணர்த்தப்பட்டு (2பேதுரு 3:9, 2 கொரி. 5:1-9) இன்றும் திருச்சபை அதற்காக ஆயத்தப்படவும், பிறரை ஆயத்தப்படுத்தவும் முயன்று வருகிறது. இரண்டாம் வருகையின் நடுத்தீர்வுக்காக விழிப்புடன் காத்திருக்கும் அழைப்பும், எச்சரிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன (மத். 24:36-43, மாற்கு 13:32, 1 தெச.5:2, மத் 25:1-13, மாற்13:23). ஆகவே விசுவாச அறிக்கையில் முதல் வருகையும், அதன் மீட்பும், இரண்டாம் வருகையும் அதின் நீதித்தீர்ப்பும் இன்றும் அறிக்கை செய்யப்படுவதோடு, நம்பிக்கையாகவும் அமைந்துள்ளன. இந்நாட்களில் நாமும் ஆயத்தப்படுவோமா? இவ்வாண்டில் இறைவனைச் சந்திக்க ஆயத்தமா? விழிப்புடன் ஆயத்தப்படுவோம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## மரியாளின் மகிமைப்பாடல் - லூக்கா 1:46-55
## Mary's Magnificat - Luke 1:46-55

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

எல்லா மக்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாய் வந்து உதித்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இயேசுகிறிஸ்து எல்லாருக்கும் உரியவர், எல்லாருக்காகவும் வந்தவர், எந்த வேறுபாடும் பாரபட்சமும், சுயநலமுமில்லாமல் அனைவரையும் நேசித்தவர், அன்பு செலுத்தியவர், சொந்தம் பாராட்டுகிறவர், வாழவைத்து வழிநடத்துகிறவர், அவரே உலக ரட்சகர், படைப்பின் மீட்பர், இருளில் வாழும் மக்களுக்கும், எளியவருக்கும், ஒதுக்கப்பட்டவருக்கும், ஏன் அனைவருக்குமே தம் வாழ்வைப் பகிர்ந்து அளித்தவர். இப்படிப்பட்ட கிறிஸ்துவை பிதாவின் சித்தத்தின்படி இவ்வுலகிற்கு பெற்றுத்தந்த அன்னை மரியாளைக்குறித்து கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ் காலங்களில் உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். இவ்வாண்டு அவருடைய மகிமையுள்ள பாடலைக் குறித்து பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யூதா கோத்திரத்தில் தாவீது வம்சத்தில் உதித்த எளிய கிராமத்துப் பெண் மரியாள். நாம் விசுவாச அறிக்கை செய்கிறபடி "அவர் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்" தன் கன்னிப் பருவத்திலே கணவனை அறியாமல் கர்த்தருடைய சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்த தேவ பக்தியுள்ள, மாசற்ற, கபடற்ற, அடையாளமாய் விளங்குபவர். தேவதூதனின் அழைப்பிற்கு பதிலாக மரியாள் பாடின இப்பாடல் புரட்சிப்பாடல் (song of revolution) என்று அந்த நாட்களில் மட்டுமல்ல இன்றும் அழைக்கப்படுகிறது. 'Magnificat' என்ற லத்தீன் வார்த்தை ரோமசபை ஆராதனையில் இப்பாடலின் தலைப்பாக பயன்படுத்தப்பட்டது. அந்த வார்த்தை 'மகிமை' என்பதைக் குறிக்கிறது. மரியாள் பாடின பாடலில் முதல் வரியான "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது" என்பதிலிருந்து இது எடுக்கப்பட்டதாகும். இப்பாடலைத் தழுவி பல பாமாலைகளும் கீர்த்தனைகளும் எழுதப்பட்டு சபைகளில் இன்றும் பாடப்பட்டு வருகிறது. இதன்மூலமாகத்தான் கர்த்தரால் எப்படி மகிமைப் படுத்தப்பட்டாள் என்பதை மரியாள் எடுத்துரைக்கிறார். ஆகவே, தேவதூதன் அவருக்குக் காட்சி தந்த இடமான அவ்விடத்தை இன்றும் இஸ்ரவேல் தேசத்திலே "மரியாள் உயர்த்தப்பட்ட இடம்" (The annunciation of Mary) என்று புனிதப் படுத்தியுள்ளனர்.

மரியாளுடைய மகிமையான உருவத்தை சிற்பங்களாய், ஓவியங்களாய், சிலைகளாய், பல நாட்டு மக்கள் தத்தம் கலாச்சார அடிப்படையில் சித்தரித்து உள்ளனர். புனித இடங்களிலேயே அதிகமான அடையாளங்கள் உள்ள இடம் இதுவே. இதற்கு மரியாளின் தைரியமான ஏற்பும் அதை வெளிப்படுத்தும் இந்த புரட்சிப்பாடலுமே காரணம். இப்பாடல் அன்னாளுடைய பாடலை (1 சாமு. 2:1-10) நினைப்பூட்டுகிறது. இரண்டிலுமே ஆழமான விசுவாசம் துதியாக வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் தங்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்ததாக இருவருமே சுட்டிக் காட்டுகின்றனர். அதன் வழியாக நடக்கக்கூடாத சூழ்நிலைகளையும் தாண்டி நடத்திக் காட்டுகிறார் ஆண்டவர் என்பதையும் உணரமுடிகிறது. கடவுள் தாம் ஏற்கனவே ஆபிரகாமுக்கும், அவருடைய தலைமுறைகளுக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களை எந்தச் சூழ்நிலையிலும் நிறைவேற்றுகிறார். ஆனால் மரியாளின் மகிமைப் பாடலில் ஒரு ஆச்சரியம் இருக்கிறது. இது வெறும் விசுவாசப் பாடல் அல்ல, மாற்றத்தின் பாடல், தலைகீழான மாற்றத்தின் பாடல் (Topsitervy or reorder song). என்னென்ன மாற்றங்களை மேசியா ஏற்படுத்துகிறார் என்பதைக் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

### 1.சமூக மாற்றம் அல்லது சமூக புரட்சி (Social change or Revolution):

“தம்முடைய புயத்தினாலே பராக்கிரமம் செய்தார், இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்” (லூக்கா 1:51). இருதயத்தில் சிந்தையில் அகந்தையுள்ளவர் யார்? மேட்டிமையுடையவர் யார்? தங்களை உயர்ந்த இனமாக, ஆதிக்கவர்க்கமாக, பெருமைக்குரியவராக எண்ணுபவரே இருதயத்தில் அகந்தையுள்ளவர். இயேசுவின் காலத்தில் பரிசேயரும், வேதபாரகரும், சதுசேயரும், தங்களை இப்படி அகந்தையுடன் எண்ணி இயேசுவை மேசியாவாகப் புரிந்து கொள்ளாமல் சிலுவையில் அறைந்தனர். அவர்களுக்குக் கடைசிவரை இறையாட்சியைப் பற்றி உணர்வு இல்லை. ஆனால் ஆவியில் எளிமையுள்ள, சாதாரண, ஒதுக்கப்பட்ட மக்கள் அதில் இடம்பிடித்தனர். இதை முன்கூட்டியே அறிந்திருந்த மரியாள் இப்புரட்சியைப்பற்றி தமது பாடலில் ஆவியால் நிறைந்து சுட்டிக்காட்டுகிறார்.

### 2. அரசியல் மாற்றம் அல்லது புரட்சி (Political change or revolution):

“பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்” (லூக்கா 1:52). வரப்போகும் மேசியா ஆற்றல் மற்றும் அதிகாரம் உடையவர்களின் கொம்பை முறித்து, அவர்களைக் கீழே இறக்கி தாழ்மையானவர்களை உயர்த்தியதை இயேசுவின் போதனைகளில், அற்புதங்களில், அடையாளங்களில் நாம் நன்கு அறிகிறோம். நிமிர முடியாதவளை நிமிர்த்தி, ஆபிரகாமின் மகள் ஆக்கியதையும், இராஜ்ஜியத்தின் புத்திரரை புறம்பான இருளின் அடையாளமாக்கி, நான்கு திசைகளிலுமிருந்து வரும் அடையாளம் தெரியாத மக்களை இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கிறவர்களாகவும் காட்டுகிறார்.

**3.பொருளாதார மாற்றம் (அ) புரட்சி (Economic change or revolution):**
“பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்” (லூக்கா 1:53). வரப்போகும் மேசியாவின் ஆட்சியில் மிகப்பெரிய பொருளாதார மாற்றம் நடைபெறும். கௌரவமான இடம் பரலோகத்தில் பசியுள்ளோருக்குக் கிடைக்கும். ஆனால் லாசருக்களைக் கண்டுகொள்ளாமல் சுயநலமாய் வாழும் ஐசுவரியவான்கள் அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடத்தில் தள்ளப்படுவார்கள்.

மேசியாவின் இறையாட்சியில் பங்குபெறவும், வருகைக்கு ஆயத்தப்படவும் சிறியோரைக் கவனிப்போம். பெருமைகளை நீக்குவோம்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## மாட்டுத்தொழுவில் இயேசு

வல்ல தேவன் பிறந்தார் - நமக்காக
மாட்டுத் தொழுவில் செல்ல பிள்ளையாய்
நாட்டு மக்களை இரட்சிக்கவே!
ஏழைக் கோலமாய் பிறந்தார்.
நாற் திசைகளிலும் பாரம் சுமக்கும்
ஏழை மக்களின் துயர் துடைப்பதற்கு
செல்லப் பாலன் பிறந்தார் - இப்பூமியிலே
அவரின் பிறப்போ, ஓர் அதிசயம்!
இவருக்கோ, சத்திரத்தில் இடமேதுமில்லை
ஆனால் சரித்திரம் படைக்கவே பிறந்தார்.
இரா பொழுதில் இயேசு பிறந்தாரென்று
தூது செல்ல தூதன் புறப்பட்டான்
வானவர் கண்டு மகிழ
வழிகாட்டியது நட்சத்திரம்
வந்தவர் காணிக்கை படைக்கவே!
பணிந்து அவரைப் போற்றினர்
விந்தையாய் மண்ணில் பிறந்தவரை - நாமும்
வாழ்த்தி இவரை வணங்கிடுவோம்

S.ஷீபா ஞான வின்சா ஸ்பர்ஜன்

## வாக்குத்தத்த செய்தி

### அவருடைய மகிமையைக் கண்டோம் யோவான் 1:14(b)

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியான நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்துவைத் தேவகுமாரன் என வெளிப்படுத்தும்போது யோவான் கூறும் வார்த்தையே, தேவன் இம்மாதத்தில் நமக்கு அருளும் வாக்கு யோவான் 1:14(b). அவருடைய மகிமை என்பது அவருடைய கிரியையே (யோவான் 9:3,4), யோவான் 1:14(b)-ல் இந்த தேவன் கிருபையினாலும், சத்தியத்தாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் என யோவான் கூறுகிறார். இதையே இயேசுகிறிஸ்து மத்தேயு 28:20-ல் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். நமக்குள்ளே வாசம்பண்ண நாம் ஒப்புக்கொடுக்கும்போது, இந்த மாதத்தில் அவருடைய கிரியையை நாம் காணும்படிச் செய்வார். பிதாவாகிய தேவன் நம் சபை, குடும்பம், தனிப்பட்ட விசுவாச வாழ்வைக் குறித்து என்ன சித்தம் வைத்திருக்கிறாரோ, அதற்கேற்றபடி குமாரன் மூலமாய் தம் கிரியையை வெளிப்படுத்துகிறார். அவருடைய கிரியைகளில் (மகிமை) சிலவற்றை இம்மாதத்தில் தியானிப்போம்.

**1.அற்புதமாகிய மகிமை:** யோவான் 2:11-ல் இயேசுகிறிஸ்து ஒரு குடும்பத்தில் ஒரு அற்புதத்தைச் செய்து, அதன்மூலம் தன் மகிமையை வெளிப்படுத்துகிறார். மகிமையை வெளிப்படுத்துவதன் மூலம் அவரை விசுவாசிக்கும்படி செய்கிறார். எந்தச் சூழ்நிலையில் தம் மகிமையை நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறார்? ‘இல்லை’ என்ற நிலை எப்போதெல்லாம் உருவாகிறதோ, அப்போதெல்லாம் தம் மகிமையை நம் வாழ்வில் வெளிப்படுத்தி ‘இருக்கிறதாக’ அற்புதம் செய்கிறார். தம் மகிமையை வெளிப்படுத்துமுன் தம் வேளையை (யோவான் 2:4) முதலாவது அவர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார். அவருடைய வேளையை நாம் எப்படி அறியமுடியும்?

அவருடைய வேளை வரும்போது ஆலோசனைகளைக் கொடுக்கிறவராக வெளிப்படுகிறார். இம்மாதத்தில் ஆண்டவர் அவருடைய வேளையை வாக்குப்பண்ணுகிறார். அவருடைய ஆலோசனைகளுக்குச் செவிகொடுப்பீர்களா? அவருடைய ஆலோசனைக்குச் செவிகொடுக்கும் போது முந்தின வாழ்வைக் காட்டிலும் நம் பிந்தின வாழ்வு மிகவும் ருசியுள்ளதாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கும் (யோவான் 2:10). அந்த ஆலோசனைகள் என்னவென்றால்: முதலாவது ஆண்டவரையே முன்வைக்கும் வாழ்வு (யோவான் 2:2), இரண்டாவது நம்மை நாமே அனுதினமும் ஆராய்ந்து நிதானித்துச் சுதந்தரிக்கும் வாழ்வு (யோவான் 2:4). இம்மாதத்தில் அவர் ஆலோசனைகளுக்குச் செவிகொடுப்போம். அவருடைய வேளையில் அவர் மகிமையைக் காண்போம்.

**2.அதிகாரமாகிய மகிமை:** யோவான் 11:4-ல் இயேசுகிறிஸ்து தம் அதிகாரத்தை வெளிப்படுத்தி தம் மகிமையை வெளிப்படுத்துகிறார். எதன் மேலெல்லாம் இயேசுகிறிஸ்து அதிகாரமுடையவர்? வியாதி, பிசாசின் கிரியை, மரணம், இயற்கை என சகலவற்றின் மேலும் (மத்தேயு 28:18) அவர் அதிகாரம் உடையவர். இந்த அதிகாரத்தை நம் வாழ்வில் எப்போது வெளிப்படுத்துவார்? “முடிந்தது” என்ற நிலைக்கு நாம் எப்போதெல்லாம் வருகிறோமோ அப்போதெல்லாம் “முடியும்” என்ற நிலை மலரும்படி நம் வாழ்வில் தம் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார் (யோவான் 11:39). அவருடைய அதிகாரம் யாருடைய வாழ்வில் வெளிப்படும்? அவரால் நேசிக்கப்பட்டோரின் வாழ்வில் வெளிப்படும் (யோவான் 11:3,5)

நேசிக்கப்பட்டோரின் வாழ்வில் புது ஆரம்பத்தை வாக்குப் பண்ணுகிறார். எப்படி புது ஆரம்பத்தை லாசருவின் வாழ்வில் துவக்குகிறார்? “லாசருவே வெளியே வா” என்ற அதிகாரமுள்ள வார்த்தையின் மூலம்தான். ஏனென்றால் அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அப்படியே இஸ்ரவேலர்களை நேசித்ததின் நிமித்தம் அவர்கள் வாழ்விலும் எகிப்தின் சிறையிருப்பையும் மாற்றி புதிய விடுதலையின் வாழ்வைக் கட்டளையிடுகிறதை வேதத்தில் காண்கிறோம். அப்படியே பவுலும் விசுவாச வாழ்வில் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக நின்றதால், தனக்கு மரணம் நிகழும் என நிச்சயிக்கப்பட்ட சூழ்நிலையில் தன் ஊழிய வாழ்வுக்கே இனி முடிவுதான் என நினைக்கும்போது (2 கொரிந். 1:8,9), கர்த்தர் அவனை மரணத்தினின்று தப்புவிக்கிறார் (2 கொரிந்.1:10). அப்போது பவுல், 2 கொரிந். 1:10b-ல் இனியும் தப்புவிப்பார் என அவரை நம்புவதாகக் கூறுகிறார். இம்மாதத்தில் அவரையே நம்புவோம். அவருடைய அதிகாரம் நம் வாழ்வில் வெளிப்படுவதைக் காண்போம்.

**3.ஆசீர்வாதமாகிய மகிமை:** லூக்கா 1:49-ல் மரியாள், “வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்” எனக் கூறுகிறாள். அவருடைய மகிமையாக பின்வரும் வசனங்களில் அவருடைய ஆசீர்வாதத்தைக் கூறுகிறாள். அவையாவன : தாழ்மையுள்ளவர்களுக்கு உயர்வு (வ.52), பசியுள்ளவர்களுக்கு நன்மை (வ.53), வாக்குத்தத்தம் நிறைவேறுதல் (வ.54,55) போன்ற ஆசீர்வாதங்களே. இம்மாதத்திலும், நம் ஆவிக்குரிய வாழ்விலும், வேலை பார்க்கும் இடத்திலும் நம்மை உயர்த்தி, நீதியின்மேல் பசிகொண்ட நம்மைத் திருப்திபடுத்தி, வாக்குத்தத்தமான இரக்கத்தைத் தந்து ஆசீர்வதிக்க கர்த்தர் காத்திருக்கிறார். இந்த ஆசீர்வாதமாகிய மகிமை வெளிப்பட மரியாள் தன் வாழ்வில் கிறிஸ்து உருவாகும்படி பரிசுத்த ஆவியானவருக்கு இடம் கொடுத்தது போல நாமும் அவருக்கு இடம் கொடுப்போம். அதன்மூலம் நீதிமானுக்கும். துன்மார்க்கனுக்கும், பொல்லாதவனுக்கும், தேவனைத் தேடுகிறவர்களுக்கும் வரும் பலனை (வ.51,52) மற்ற உலகத்தார் காண்பார்கள்.

இம்மாதத்தில் யோவான் இயேசுகிறிஸ்துவின் மகிமையைக் கண்டதுபோல, விசுவாசிக்கிற ஒவ்வொருவரின் வாழ்விலும் தம் மகிமையை வெளிப்படுத்தி, நன்மையையும், கிருபையையும் அடையும்படி தேவன் அருள் செய்வாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

7th grade-ல் படிக்கும் எழிலன் எப்போதுமே மற்ற மாணவர்களோடு சண்டைபோட்டுக்கொண்டிருப்பான். அவனுக்கு நண்பர்களே கிடையாது. புதிதாக யாராவது அவனிடம் பேசும்படி சென்றாலும், அவன் அவர்களை அலட்சியப்படுத்திவிடுவான். வகுப்பில் ஒழுங்காகப் படிக்கும் மாணவர்களுக்கும் அவன் இடையூறாக இருந்தான். ஆனால் அவன் எப்படியும் வகுப்பில் முதல் 5 Rank-க்குள் வந்துவிடுவான். அதே Grade-ல் நவீன், பிரவீன், செல்வின் மூவரும்கூட படித்து வந்தார்கள். இவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு நல்ல பிள்ளைகளாக மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருந்தார்கள். எழிலன் சுபாவம் அவர்களை அதிகமாக வருத்தப்படுத்தியது.

ஒருநாள் மாலை பள்ளி முடிந்தபிறகு இந்த மூவரும் பள்ளி மைதானத்தில் ஒன்றாகக் கூடினார்கள். எழிலனுக்காக ஜெபிக்கவேண்டும் என்பதே இவர்களின் நோக்கம். "உம்முடைய அன்பை அறிந்துகொள்ள கிருபை செய்யும்" என பிரவீன் ஜெபித்தான். "எழிலன் மனம் மாற கிருபை செய்யும்" என நவீன் ஜெபித்தான். "ஆண்டவரே, உம்முடைய அன்பை எழிலனுக்குக் காட்டும்படியான வாய்ப்பை எங்களுக்குக் கொடுத்தருளும்" என செல்வின் ஜெபித்தான். இவர்கள் ஜெபித்ததை எழிலனின் நண்பன் ஆலன் கேட்டுக்கொண்டிருந்தான். இதை எழிலனிடம் ஆலன் தெரிவித்து விட்டான்.

அடுத்தநாள் எழிலன், செல்வின் சட்டையைப் பிடித்து, மூவரையும் பார்த்தவாறு, என்னங்கடா, என்னோடு நேரில் பேசவே உங்களுக்குத் தைரியம் கிடையாது, எனக்காக ஆண்டவரிடம் ஜெபிக்கிறீர்களோ? அவரால் என்னை என்ன செய்யமுடியும்? என்றான் எழிலன் முரட்டுக் குரலில். "அவரால் உன்னை மாற்றமுடியும்" என்றான் நவீன். "நான் இப்போது வேண்டாத ஒருவனாகவா இருக்கிறேன்? நன்றாகப் படிக்கிறேன், நன்றாக விளையாடுகிறேன். என்னை ஏன் மாற்றவேண்டும்?" என்றான் எழிலன். அப்போது சற்று தொலைவில் Maths Teacher வருவதைக் கண்டவுடன், அவர்களை முறைத்துப் பார்த்தவாறே விலகிச் சென்றான் எழிலன். ஆனால் தொடர்ந்து எழிலனுக்காக ஜெபிப்பதை அவர்கள் நிறுத்தவில்லை.

Winter Holidays முடிந்து, பள்ளி மறுபடியுமாகத் திறந்தது. முதல் 2 நாட்களாக எழிலன் பள்ளிக்கு வரவில்லை. ஆலனுக்கும், எழிலன் ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. பள்ளி அலுவலகத்தில் விலாசத்தைப் பெற்றுக்கொண்ட மூவரும் அங்கு சென்றால், அவனது வீடு பூட்டியிருந்தது. எழிலனுக்கு Typhoid எனவும், அது சுகமானபின் மறுபடியும் நோயால் பாதிக்கப்பட்டதால் அவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் அருகிலிருந்தோர் கூறினர். மருத்துவமனை விலாசத்தைப் பெற்றுக் கொண்டு புறப்பட்ட அவர்கள், Junior church teacher பிரபாவின் வீடு செல்லும் வழியில் இருந்ததால் அவரையும் உடன் அழைத்துச் சென்றனர்.

நால்வரும் எழிலனின் படுக்கையருகே சென்றார்கள். பிரபா சார் ஜெபிக்கத் தொடங்கினார். அவ்வேளையில் எழிலன் விழித்துக் கொண்டான். ஆனாலும் உடனே எழவில்லை. அவர்கள் தனக்காகக் கண்ணீரோடு ஜெபிப்பதைக் கண்டு அவன் தன் இருதயத்தில் தொடப்பட்டான். உண்மையில் செல்வின் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தான். ஜெபிப்பதை முடித்தபின் எழிலன் செல்வினிடம், "எனக்காக நீ அழுவதைப் பார்த்தேன், எப்படி உன்னால் முடிகிறது?" என்றான் தழுதழுத்த குரலில். "இயேசுகிறிஸ்துவால்தான்" என்றான் செல்வின். "அவரைப்பற்றி எனக்கும் சொல்வீர்களா" என்றான் எழிலன்.

இயேசு தேவகுமாரன், தேவன் நம்மைப் படைத்தார். ஆனால் நாம் அவருக்கு விரோதமாகத் தவறு செய்கிறோம், பொய் சொல்லுகிறோம், சண்டை போடுகிறோம். இதனால் தேவனைச் சேரமுடியாத நிலைக்குப் போய்விட்டோம். அப்படியே தேவன் விட்டுவிடாமல், தம் குமாரனை இவ்வுலகில் பிறக்கும்படிச் செய்து, நம் பாவங்களை அவர் சிலுவையில் சுமக்கும்படிச் செய்து, அவரை மறுபடியும் உயிரோடு எழுப்பினார். நாம் இதை விசுவாசித்து, நம் பாவங்களை அறிக்கையிட்டு மனம் திரும்பினால் அவர் இயேசுவைப்போல் உன்னையும் மாற்றுவார்" என்றார் பிரபா சார். இப்போது எழிலனும் மற்ற மூவரோடு ஜெபிப்பதை மற்ற மாணவர்கள் பார்த்தார்கள்.

வேதவாசிப்புப் பகுதி : அப். 4:1-13

மனப்பாட வசனம் : யோவான் 3:16

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் 11 மாதங்களைக் கடந்து 12 வது மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு கோடானுகோடி நன்றி கூறிக்கொள்கிறேன்.

11-11-2016 அன்று Jr. Church assessment நடைபெற்றது. இதற்காக உழைத்த Teachers மற்றும் Jr. Church incharge Mrs.Rachel Manuel அவர்களுக்கும், பிள்ளைகளை உற்சாகப்படுத்திய பெற்றோருக்கும் நன்றி கூறுகிறேன்.

18-11-2016 அன்று நமது அறுப்பின் பண்டிகை மிக நேர்த்தியாக நடந்தேறியது. இதற்கு நமக்கு உதவி செய்த Mr.David Thomas Alexander, Mr.Satheesh அவர்களுக்கு நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளேன். மற்றும் இதற்காக மிகவும் பிரயாசப்பட்ட Prayer cell leaders, Convenor, Mr.Hemanth, Food Incharge Mrs.Irene Jayaseelan, அவர்களுக்கு உதவி செய்த Mrs.Initha Moses மற்றும் Mrs.Sheeba Gold அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். மற்றும் இதற்காக உழைத்த Womens fellowship, Mens fellowship, Jr.Church, Youth fellowship யாவருக்கும் நன்றி கூறுகிறேன். Harvest Festival மூலமாக Dhms.8.45 Lakh காணிக்கை கிடைக்கப் பெற்றதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சபைமக்களுக்கு நன்றி கூறுகிறேன். அன்றைய தினத்தில் நம் மத்தியில் கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்துகொண்ட Rev.Harrison, Chaplaincy அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். மற்ற UAE-ல் உள்ள கிளைச்சபைகளின் ஆயர்மார்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

Harvest Festival Thanks giving prayer meeting-ல் கலந்து சிறப்பித்த Prayer cell leaders, convenors மற்றும் volunteers யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

25-11-2016 அன்று நம் மத்தியில் கர்த்தரின் செய்தியை பகிர்ந்து கொண்ட Rev.Isaac Fernandez, CSI, Vellore Diocese ஆயர்க்கு நன்றி பாராட்டுகிறேன்.

நமது சபையின் வருடாந்திர Convention 28,29,30-11-2016 அன்று Bro.Freddy Joseph வந்து சிறப்பித்தார்கள். அது நமது சபைமக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பிரயோஜனமாய் இருந்தது. அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

திருமதி சுகந்தி சாமுவேல் அவர்கள் 25-11-2016 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்கள் என்ற செய்தி மிகவும் துயருற செய்தது. அவர்கள் நமது சபையின் முன்னாள் Jr. Church Teacher ஆகவும், Youth fellowship incharge ஆகவும் இருந்து சிறப்பாக பணியாற்றியவர்கள். இந்த December மாதம் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட ஆயத்தப்படுவோம்.

சிங் ரெத்னம், செயலர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. A.Robin | 2686 | RAK |
| 2 | Mr. Daniel Francis | 2687 | Dubai |
| 3 | Mrs. C.Subha George | 2688 | Dubai |
| 4 | Mr. M.Jayalal | 2689 | Dubai |

## NEW PARSONAGE

Near Al Garhoud-Choithram Super Market
Behind "Le Meridian Hotel"
Street No : 47, Villa No 6A
Tel.Res.: 04 2552065, Mob: 050 5533645,
Tel.Off.: 04 2249249. Email: tamilcsi@eim.ae

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 47 கவி 1 களிகூரு சீயோனே
ஆராதனை இறுதி கவி : பாமாலை 204 கவி 2 கர்த்தரே தற்காரும்

| | | |
|---|---|---|
| 02-12-2016 | | |
| பாமாலை | 46 | இம்மானுவேலே வாருமே |
| பாமாலை | 165 | கிறிஸ்து எம் ராயரே |
| கீர்த்தனை | 18 | பாடித்துதி மனமே பரனை |
| கீர்த்தனை | 51 | மாசில்லாத் தேவபுத்திரன் |
| கீர்த்தனை | 54 | வாரும் பெத்லகேம் வாரும் |
| 09-12-2016 | | |
| பாமாலை | 53 | கேள்! ஜென்மித்த ராயர்க்கே |
| கீர்த்தனை | 49 | பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித் |
| கீர்த்தனை | 50 | பெத்லகேம் ஊரொரம் சத்திரத்தை |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதிப்பாய் |
| 16-12-2016 | | |
| பாமாலை | 16 | போற்றும் போற்றும் |
| பாமாலை | 56 | நள்ளிரவில் மா தெளிவாய் |
| கீர்த்தனை | 41 | கண்டேனென் கண் குளிர |
| கீர்த்தனை | 43 | ஆ! அம்பர உம்பர |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே ரட்சகனைத் |
| 23-12-2016 | | |
| பாமாலை | 9 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| பாமாலை | 106 | நான் பாவிதான் |
| பாமாலை | 54 | சபையே இன்று வானத்தை |
| கீர்த்தனை | 20 | வாரும் நாம் எல்லாரும் கூடி |
| கீர்த்தனை | 42 | அதி மங்கல காரணனே |
| கீர்த்தனை | 5 | இயேசு நாயகனை துதிசெய் |
| 25-12-2016 | | |
| பாமாலை | 59 | மெய் பக்தரே நீர் |
| பாமாலை | 60 | ராக்காலம் பெத்லகேம் |
| கீர்த்தனை | 44 | ஆதித்திருவார்த்தை |
| கீர்த்தனை | 45 | ஆர் இவர் ஆராரோ |
| கீர்த்தனை | 49 | பெத்தலையில் பிறந்தவரை |
| கீர்த்தனை | 50 | பெத்லகேம் ஊரோரம் |
| 30-12-2016 | | |
| பாமாலை | 155 | சர்வத்தையும் அன்பாய் |
| கீர்த்தனை | 102 | இரங்கும் இரங்கும் |
| பாமாலை | 117 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 8 | ஏசுவையே துதி செய் |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |

# இயேசு பிறப்பு

போற்றிசொல்லிப் பாட்டெழுதி
மீட்டும்இன்பத் திருவிழா
சுற்றமெல்லாம் சுற்றிவந்து
போற்றிப்பலி சாற்றுவிழா

மீண்டெழுந்த மனுக்குலகமே
கண்டுணர்த்தும் சாட்சிவிழா
மேன்மைமேல் மேன்மைபெற்று
பண்பட்டுவிட்ட
கொண்டாட்டவிழா

மண்ணுலகே சமநிலையில்
கைகுலுக்கும் களிப்புவிழா
மண்மாந்தர் விண்வேந்தர்
மகிழ்ந்தேற்றப் பிறந்தவிழா

பெத்தலைச் சத்திரம்
நித்திரைக்கு இல்லை
வயித்திலோ துடிக்குது
வேளைவந்த பிள்ளை

சொந்தஊர் அந்தஊர்
தங்குமிடம் எங்குமில்லை
வந்தவர் மரியோசேப்பு
குடிமதிப்பு எழுதும்எல்லை

பிறந்துவரும் முந்திப்பாரம்
சுமக்குதோ பிள்ளை
சிறப்புற மனுக்குலம்
ஏற்றதோ தொல்லை

பெற்றதாய் பால்மறுத்தாலும்
பதிலித்தாய் பசுமறுக்குமோ?
உற்றதுணை உறவாக
வைத்துவிட்டதோ
தொழுவத்தில்இடம்?

குளிர்பனி தளிர்நுனி
தழுவிடும் நடுஇரவு
குளிர்காற்று குளிராஇருள்
விடிவுதேடி விடைவரவு

வான்இறங்கி தூதர்வந்தார்
வயல்மேய்ப்பர்
பயந்துவிட்டார்
வான்வார்த்தை பயப்படாதீர்
தேவமகிமை சூழ்பிரகாசம்

சுடச்சுடச் செய்திசொன்னார்
இயேசு பிறந்தார்
திடமுடன் மேய்ப்பர்
மகிழ்ச்சியுற்றார்
எழுச்சிபெற்றார்

தொழுவத்தில் தேவபாலன்
தொழுதுகொள்ள
உள்ளஅடையாளம்
முழுதுந்துணி பொதிந்து
புல்வணையில் மனுமகன்

வான்பூமி நடுவில்வந்து
முழக்கியது வாழ்த்தும்
தேன்கீதமும், நிகழ்த்தியதும்
வான்தூதர் கூட்டம்

ஆதாரம் : லூக்கா 2
கவிதை எண் : 193
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. வெளிப். 1:5

கர்த்தர் படைத்த
உயிரினங்களின்
உயிர் ஒரு நாள்
உலகைவிட்டு
உடலைவிட்டு
போகும் என்பது
யாவருக்கும்
பொதுவிதி.
அன்றைய காலம்
அராஜகம் ஆண்டது
பூவுலகு
மெல்ல மெல்ல
பாவலோகமானது
இவைக்கு - ஒரு
முடிவுகாலமாக - ஒரு
விடிவுகாலமாக
இறைமைந்தர்
இயேசு
சகல பாவமும்
போக்க
சாதாரண மனிதராக
அவதரித்தார்...
இயேசுவை
அன்றைய அரசு
மிகக் கடுமையாக
வருத்தி
கொடுமையாகக்
கொன்றார்கள்
கொடுங்கோலர்கள்
மனிதரின்...
வரம்புக்குள்
அடைக்க இயலுமா
ஆண்டவரை
என்னே அதிசயம்
அற்புதம்
இயேசு மூன்றாம் நாள்
உயிருடன் எழுந்தார்.

இந்த சேதி கேட்டதும்
சதி செய்தவர்கள்
மதி மயங்கி
நின்றார்கள்
உலகின்
அதிபதி அவரென
அறியாத மூடர்கள்
பீதி அடைந்தார்கள்
மனுக்குல
சரித்திரத்தில்
மரித்தவரில் முதலில்
பிறந்து உலகின்
முதல் சாட்சியாக
ஒளிர்கிறார் இயேசு
நாமும்
ஆண்டவர் நமக்கு
செய்யும் நன்மைகளை
சாட்சியாக
சொல்லுவோமே
ஆடு மேய்க்கும்
தாவீதை அரசனாக்கி
அரியணையில்
அமரவைப்பதும்
கர்த்தர்
அரசனான சவுலை
சாதாரண
மனிதராக்குவதும்
கர்த்தருக்கு-ஒரு
விசயமே அல்ல.
ராஜாக்களை
நியமிப்பதும்
யாரை எங்கே
ராஜாவாக்க
வேண்டும் என்பதும்
ராஜாக்களின் ராஜா
இயேசு ராஜாவே
காரணம்.

கடந்த
கருணையை உடைய
இயேசுவே
நமக்கு
கிருபையும்
சமாதானமும்
தருகிறார்
அன்பரே...
இயேசுவை நோக்கும்
கண்களே கண்கள்
அவர் ஆலயம் புகும்
கால்களே கால்கள்
இயேசுவை பணியும்
தலைகளே தலைகள்
அவரை வணங்கும்
கைகளே கைகள்
இயேசுவின்
போதனையைக்
கேட்கும்
செவிகளே செவிகள்
அவரை தியானிக்கும்
நெஞ்சமே நெஞ்சம்
இயேசுவைப் பாடும்
வாய்களே வாய்கள்
இயேசுவுக்கு
அடிமையாகும்
அடிமையே அடிமை
என வைராக்யம்
கொள்வோம்
புவியில் வைரமாக
ஜொலிப்போம்
இன்று பிறக்கும்
கிறிஸ்துமஸ்
திருநாளில்
உலகமே விழித்தெழு
இயேசுவை
தொழுதெழு

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## ஃபுஜைரா கிளைச்சபை
## ஸ்தோத்திரப் பண்டிகை 2016

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

நாள் : வெள்ளிக்கிழமை 09-12-2016
இடம் : ஆலய வளாகம்
நேரம் : மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

### நிகழ்வு முறைமை

மாலை 05.00 மணி : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை
மாலை 06.00 மணி : ஸ்டால்கள் திறப்பு விழா, விற்பனை
மாலை 07.00 மணி : ஏல விற்பனை
ஸ்தோத்திரப் பண்டிகை
நிறைவு ஜெபம்,ஆசீர்வாதம்

உணவு ஸ்டால்கள்: மாலை சிற்றுண்டி, இனிப்பு, காரங்கள், காப்பி, தேனீர், குளிர்பான ஸ்டால்கள், பிரியாணி மற்றும் இதர ஸ்டால்கள்.

ஊக்கமாய் ஜெபியுங்கள்!
மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!
உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!

**கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!**

மாலி என்ற பறவை வாத்தை விட சற்றே பெரியது. ஆஸ்திரேலியா தேசத்தில் காணப்படும் இந்தப் பறவைகளின் விநோதமான செயல்பாடு நம்மை வியப்படைய வைக்கிறது. இலையுதிர்காலம் வந்தவுடனே ஆண் மாலிப் பறவை மூன்றடி ஆழமுள்ள ஒரு குழியை மணலில் தோண்டி, ஒவ்வொரு மழைக்குப் பிறகும் அதனுள் இலை தழைகளைப் போட்டு மூடிக்கொண்டே வந்து 35 அடி நீளமும் 15 அடி உயரமுமான ஒரு குவியலை அது கட்டுகிறது. அதுமட்டுமல்ல, தனது மூக்கையும் நாக்கையும் அந்தக் குவியலினுள்ளே வைத்து அதனுள்ளே இருக்கும் வெப்பத்தையும் அது கணிக்கிறது. கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்தக் குவியலினுள்ளே வெப்பம் 92 டிகிரி ∴பாரன்ஹீட்டைத் தொடுகிறது. உடனே ஆண் பறவை அந்தக் குவியலில் மறுபடியும் ஒரு குழியைத் தோண்ட, பெண் பறவை அதனுள் முட்டைகளை இடுகிறது. முட்டைகள் வெளியே தெரியாமல் ஆண் பறவை அதை மூடிப் பாதுகாக்கிறது. குறிப்பிட்ட வெப்பநிலையைத் தக்கவைக்க அவ்வப்போது மணல் மேட்டின் உயரத்தை இந்த ஆண் பறவை சரிசெய்து கொண்டேயிருக்கிறது. குஞ்சுகள் பொரித்தபின், அவை இந்த மேட்டை உள்ளிருந்து தோண்டித்தான் வெளியே வரவேண்டும். அதற்கு அவை மிகவும் பிரயாசப்பட வேண்டும். இந்த கடுமையான பிரயாசம், வெளியே வந்தவுடனே பறக்குமளவிற்கு அவைகளைத் தயார் செய்துவிடுகிறது. இந்த மாலிப் பறவைக் குஞ்சுகள் வெளியே வந்த 24 மணி நேரத்திற்குள்ளாக வானத்தில் பறந்துவிடுகின்றன. யாரும் எதையும் சொல்லிக் கொடுக்காமல், கர்த்தரே அவைகளுக்கு கற்றுக்கொடுக்கிறார். "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்" (சங்கீதம் 104:24). தேவன் பறவைகளுக்கு தன் கூடுகளை கட்டுவதற்கு அறிவு கொடுக்கும்பொழுது நாம் அவரை அண்டினால் நமக்கும் ஞானத்தை தருவார். "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே" (நீதி 3:5,6,7). வேதாகமத்தில் தேவனுடைய பிரசன்னம், அவருடைய சமூகம் எத்தனை பெரிய புகலிடமாக இருக்கிறது என்ற உண்மையை விளக்க சங்கீதக்காரன் பறவைகளின் கூட்டை எடுத்துக்காட்டாகக் கூறுகிறான். "என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே"(சங்கீதம் 84:3). மனிதன் இப்பூமியில் கோடிக்கணக்கில்

செலவு செய்து மாடமாளிகைகளைக் கட்டுகிறான். பூமியதிர்ச்சி போன்ற இயற்கைச் சீற்றங்களினால் ஒரு நொடியில் இவைகள் அழிகின்றன. அன்று அரசர்கள் வாழ்ந்த அரமனைகள் இன்று காட்சி இடங்களாக உருக்குலைந்து காணப்படுகிறது. "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி 5:1). கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றி நடக்கிறவர்களுக்கு உலக சொத்து வீடு போன்றவை நிரந்தரம் அல்ல. பரலோக அழைப்பு வரும் நாளில் இப்பூவுலகில் நமக்கு இருப்பவைகளை நாம் இங்கேயே தான் விட்டு செல்ல வேண்டும். ஆண்டவரை நம்பி அவருக்கே உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தவர்களுக்கு பரமவீடு உண்டு. அதுதான் நம்முடைய நிரந்தர முகவரி. "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14:1-3). ஆம், அவர் நமக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கும் அந்த பரம வீட்டை அடைந்து நித்திய வாழ்வினை பெற்றுக்கொள்ள, வழுவாதபடி நம்மைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள நம் தேவன் கிருபை செய்வாராக.

என் சொந்த தேசம் இங்கே இல்லை இங்கே நான் பரதேச வாசியல்லவோ
பரலோகமே என் சொந்த நாடு அங்கெனக்கு கர்த்தர் வீடு உண்டு
அக்கரைக்கு யாத்திரை செய்யும் சீயோன் யாத்திரீகார்
அலைகளைக் கண்டு நீ பயப்படாதீர்

இனிதா மோசஸ்

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"
Jubrilin U.S.Shasmitha
D/o.Mr.Ujinraj & Mrs. Sangeetha Ujinraj
08-11-2016

## ஆபிரகாம் - ஈசாக்கு!!!

ஆபிரகாமையும் ஈசாக்கையும் சோதிக்கச் சென்ற சாத்தான் அவர்களை விட்டு மறைந்து அவர்கள் செல்லும் வழியில் முன்னதாக ஓடி அவர்கள் வழியை மறைக்கும் வண்ணமாக ஒரு பெரிய ஓடையாக மாறினான். ஆபிரகாமும் ஈசாக்கும் அவர்களோடிருந்தவர்களும் அதின் தண்ணீர் வலிமை மிக்கதாகக் கண்டார்கள். அவர்கள் அதைக் கடக்க முற்பட்டனர். அவர்கள் கால்வரை இருந்த தண்ணீர் அவர்கள் இறங்கி கடக்க முயன்றதும் கழுத்துவரை வந்து அவர்கள் முழுகத்தக்கதாக உயர்ந்தது. அதைக் கடக்க, கலங்கியப் பொழுது ஆபிரகாம் இதற்கு முன்னதாக இவ்வழியாக பிரயாணித்தபோது இவ்வோடை இல்லையே என நினைவுகூர்ந்தார்.

ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்கை நோக்கி, “இந்த இடத்தை நான் நன்கறிவேன். இதற்கு முன்பு இவ்விடத்தில் இப்படி ஒரு ஓடை இருந்ததில்லை. இது நம்மை கடவுளுடைய கட்டளையை நிறைவேற்றவிடாமலிருக்க செய்ய சாத்தானின் ஒரு தந்திர சூழ்ச்சியாக இருக்கலாம்” என்று கூறிவிட்டு, அவ்வோடையைப் பார்த்து, “சாத்தானே, கடவுள் உன்னை அதட்டுவாராக. ஏனெனில் நாங்கள் கடவுளின் கட்டளைப்படி பிரயாணம் செய்கிறோம்” என்றார். அதைக் கேட்ட சாத்தான் பயந்து, அவர்கள் வழியை விட்டு அகன்று போனான். அவ்வோடையும் மறைந்து பழைய வறண்ட நிலமாக மாறியது.

ஆபிரகாம் ஈசாக்கோடே கடவுள் அவருக்குக் கூறிய இடத்தை நோக்கி முன்னேறிச் சென்றார். மூன்றாம் நாளிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது கடவுள் தன்னுடன் கூறிய மலையினிடத்திற்கு வந்தடைந்தார். அப்பொழுது, ஒரு அக்கினி ஸ்தம்பம் தோன்றி வானத்திற்கும் பூமிக்கும் நடுவே நின்றது. மலையின்மேல் மேகஸ்தம்பம் போன்று தேவமகிமையும், தேவ பிரசன்னமும் மேகத்தின் நடுவே கண்டார். உடனே ஆபிரகாம் ஈசாக்கை நோக்கி, “மகனே, நான் ஏறெடுத்துப் பார்க்கும் அம்மலையின்மேல் எதையாவது காண்கிறாயா?” எனக் கேட்டார். ஈசாக்கு அவரிடம், “நான் ஒரு அக்கினி ஸ்தம்பத்தையும், மேகஸ்தம்பத்தையும், தேவபிரசன்னத்தையும் மேகத்தின் நடுவே காண்கிறேன்” என்றான். ஆபிரகாம், கடவுள் தன் மகனைத் தகனபலியாக ஏற்றுக்கொள்வார் என்று அறிந்துகொண்டார். ஆபிரகாம் எலியேசரையும் இஸ்மவேலையும் கண்டு “இங்கே நமக்கு எதிராக இருக்கும் இம்மலையில் எதைக் காண்கிறீர்கள்?” என்றார். அவர்கள் அவருக்கு

பிரதியுத்தரமாக, “பூமியிலே உள்ள மற்ற மலைகளைப்போன்ற ஒரு மலையாகத்தான் காண்கிறோம்” என்றார்கள். ஆபிரகாம் அவர்களிடம், “நானும் என்னுடைய மகனாகிய ஈசாக்கும் அம்மலைக்குச் சென்று கடவுளைத் தொழுதுவிட்டு உங்களிடம் வருகிறோம். நீங்கள் கழுதைகளோடு இங்கே தங்கியிருங்கள்” என்றார். ஆபிரகாமின் கட்டளைக்கு இணங்கி எலியேசரும் இஸ்மவேலும் அங்கே தங்கிவிட்டனர்.

ஆபிரகாம் தகனபலிக்கு வேண்டிய கட்டைகளை எடுத்து ஈசாக்கின்மேல் வைத்து, நெருப்பையும், கத்தியையும் கையில் எடுத்துக்கொண்டு ஈசாக்கோடே புறப்பட்டார். வழியிலே ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, “கட்டையும், நெருப்பும் இருக்கிறதைக் காண்கிறேன். கர்த்தருக்கு தகனபலியாக பலியிடுவதற்கான ஆட்டுக்குட்டி எங்கே?” என்றான்.

ஆபிரகாம் தன் மகனை நோக்கி, “மகனே, கர்த்தர் தகனபலிக்கு தகுதியானதாக ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக உன்னை தெரிந்து கொண்டார்” என்றார். ஈசாக்கு ஆபிரகாமிடம், “நான், கர்த்தர் தங்களிடம் கூறிய கட்டளைகள் எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் கூடிய இருதயத்தோடு செய்வேன்” என்றான். ஆபிரகாம் மீண்டும் ஈசாக்கிடம், “மகனே, உன் இருதயத்தில் ஏதாவது தகாத யோசனையோ, அல்லது ஆலோசனையோ இருப்பின் கூறிவிடு. ஒன்றையும் மறைக்க வேண்டாம். நான் உனக்காக கடவுளிடம் மன்றாடுவேன்” என்றார்.

(பின்னர் நடந்ததென்ன?) தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம் தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சார்ந்த Mr.Stanly Jones அவர்களின் தகப்பனார் Mr.Paul Rajasekar அவர்கள் 07-11-2016 அன்றும்

நமது சபையைச் சார்ந்த Mr.H.R.Sekar & Mr.H.A.Chellappa ஆகியோரின் சகோதரர் Mr.Henry Manivasagam அவர்கள் 11-11-2016 அன்றும்

நமது சபையைச் சார்ந்த Mr.Reginald Samuel அவர்களின் துணைவி Mrs.Suganthy Samuel அவர்கள் 25-11-2016 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்; யாக்கோபின் தேவனே, செவிகொடும்." சங்கீதம் 84:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை, கன்வென்ஷன் கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

